# பாகம்—I

# (PART I)

# உரிமையியல் நடைமுறைச் சட்டம்

## (1908—ம் வருடத்திய சட்டம்)

## (2002—ம் வருடத்திய 22வது சட்டம் வரை திருத்தப்பட்டது)

## [THE CODE OF CIVIL PROCEDURE]

## (ACT OF 1908)

## (AS AMENDED-ACT NO. 22 OF 2002)

## வரையறைகள் (பிரிவு 2)

### (DEFINITIONS)(Sec. 2)

### 1. தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பாணைகளின் வகைகள் (பிரிவு 2(2)

### [DECREE AND TYPE OF DECREES: (Sec. 2 (2)]

**பாடச்சுருக்கம் : (SYNOPSIS)**

அ. வரையறை

ஆ. தீர்ப்பாணையின் முக்கிய அம்சங்கள்

இ. தீர்ப்பாணைகள் அல்லாத தீர்ப்புகள்

ஈ. தீர்ப்பாணைகளாகும் தீர்ப்புகள்

உ. தீர்ப்பாணைகளின் வகைகள்

ஊ. முதல் மற்றும் இறுதி தீர்ப்பாணைகளுக்கிடையிலான வேறுபாடு



**அ.வரையறை: (DEFINITION)**

ஒரு வழக்கின் தீர்ப்பினை முறைப்படியாக முன்வைத்தல் தீர்ப்பாணையாகும். இது இறுதி முடிவினை உறுதி செய்கிறது. வழக்கில் இரு தரப்பினர்களுக்கு இடையேயுள்ள கருத்து வேறுபாடுகள் குறித்து அவர்களுக்கு உள்ள உரிமைகள் பற்றி இது தீர்மானிக்கிறது. தீர்ப்பாணையானது ஆரம்பமாகவோ அல்லது முடிவாகவோ இருக்கலாம். வாதுரையை நிராகரிப்பதும் இதில் அடங்கும். மேலும் உரிமையியல் வழக்கு விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 47 மற்றும் 144ன் கீழ் எழுகின்ற எந்தவொரு வினாவிற்கும் முடிவெடுத்தல் இதில் அடங்கும்.

ஒரு குறிப்பிட்ட வழக்கில் வழக்குதாரர்களுக்கு இடையேயான உரிமைகள் மற்றும் பொறுப்புகளை பிரிவு 47 தீர்மானிக்கின்றது. இறுதி முடிவு எடுக்கப்படவில்லையென்றால் தீர்ப்பாணை இருக்காது.

**ரத்தன் சிங் எதிர் விஜய் சிங் மற்றும் மற்றவர்கள் AIR 2001 SC 279:**

**(RATAN SINGH VS. VIJAY SINGH AND OTHERS, AIR 2001 SC 279)**

ஒரு தீர்மானத்தின் தீர்ப்பு தீர்ப்பாணையாக ஆவதற்கு பின்வருவன இருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியது:

i. வழக்கொன்றில் தீர்வுறுதி ஒன்று இருக்க வேண்டும்.

ii. அத்தகைய தீர்வுறுதி வழக்கில் மாறுபட்டு இருக்கும் எந்தப் பிரச்சனை அல்லது அனைத்துப் பிரச்சனை குறித்து தரப்பினர்களின் உரிமைகளைத் தீர்மானித்திருக்க வேண்டும்.

iii. அத்தகைய தீர்மானம் முடிவுகூறும் தன்மையில் இருக்கப்பட வேண்டும்.

## ஆ. தீர்ப்பாணையின் முக்கிய அம்சங்கள்:
**(ESSENTIALS OF A DECREE)**

1. வழக்கின் முறைப்படியான நோக்கத்தினை இது தெரிவித்தல் வேண்டும். வாதுரையில் கோரிய எவ்வித பரிகாரத்தையும் தருவது அல்லது தர மறுப்பது தீர்ப்பாணையாகும். இம் மாதிரியான தீர்ப்பு அல்லது முடிவு நீதிமன்றத்தின் முறைப்படியான விளம்புகை வடிவில் இருக்க வேண்டும். தீர்ப்பின் நியதியாக தீர்ப்பாணை எழுதப்படுகின்றது.

2. நீதிமன்றத்தின் முன்பு உள்ள வழக்கின் மீதுதான் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். வழக்கு இல்லையென்றால் தீர்ப்பாணை இல்லை மேல்முறையீடுகளும் வழக்கில் அடங்கும்.

3. வழக்கில் உள்ள எவ்விதமான அல்லது எல்லா விதமான கருத்து வேறுபாடு பற்றியும் அதில் இரு விஷயத்திலும் வழக்குதாரர்களுக்கிடையிலான உரிமையைத் தீர்மானிக்கும்.

4. இவ்வகை நீதித்தீர்ப்பானது இறுதியானது. அதாவது இது முழுமையாகவும், இறுதியாகவும் இருக்க வேண்டும். மேற்கண்ட நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் அது தீர்ப்பாணை ஆகாது. ஆனால், அது ஒரு கட்டளை அல்லது ஒரு பிரச்சனையைக் கண்டறிதலாக இருக்கும்.

## இ. தீர்ப்பாணைகள் அல்லாத தீர்ப்புகள் :
**(DECISIONS WHICH ARE NOT DECREES)**

1. நிறைவேற்றுகை நடைமுறையில் பிறப்பிக்கப்பட்ட கட்டளை அல்லது உத்தரவு.

2. செய்யக்கடவதை செய்யாது இருப்பதால் வழக்கினை தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்படும் ஆணை.

3. வழக்கு நடைமுறை சம்பந்தப்பட்டவை நீதிமன்றத்தின் தீர்ப்பாணை. ஏனென்றால் வழக்கு சம்பந்தப்பட்ட பொருள் குறித்து வழக்குதாரரின் தனித்த உரிமை பற்றி முழுவதுமாக அதில் தீர்மானிக்கப்படுவதில்லை.



4. காலவரையறை, அதிகார எல்லை, முன்தீர்ப்பு தடை மற்றும் வழக்கு தாக்கல் செய்தல் இவைகள் குறித்த நீதிமன்றத்தின் முடிவுகள்.

5. வாரிசு சான்றிதழ், இது தீர்ப்பாணையோ அல்லது கட்டளையோ அல்ல. ஏனெனில் அது வழக்குதாரர்களின் உரிமைகள் குறித்து இறுதியாகத் தீர்மானிப்பதில்லை.

6. மோசடியாக பெறப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை, சட்டத்தின் பார்வையில் செல்லத்தக்கதல்ல. (எஸ்.பி. செங்கல்வராய நாயுடு எதிர் ஏ. ஜெகன்னாத்) (**AIR** 1994 **SC** 853)

7. நில ஆர்ஜித சட்டம் பிரிவு 49 (1)—ன் கீழ்எடுக்கப்பட்ட தீர்மானம் அல்லது தீர்ப்பாணை அல்லது மற்றும் அதன்பேரில் மேல்முறையீடு (**Appeal**) செய்ய இயலாது. (தீப் சந்த் எதிர் நில ஆர்ஜித அதிகாரி) (**Land Acquisition Officer) (AIR 1994 SC 1901)**

### 8. லீலா முதலீடு மற்றும் நிதி எதிர் மோதிலுப்ட் லிமிடெட் AIR 2003 BOM 111:
**(LEELA CAPITAL AND FINANCE V. MODILUFT LTD., AIR 2003 BOM 111)**

வழக்கு நிலுவையில் இருக்கும்போது சூழ்நிலைகளுக்குட்பட்டு உட்கிடை ஏற்பாடு மூலம் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டிருந்த தொகையைத் திரும்ப பெறுவதற்கு பிறப்பிக்கப்பட்ட ஆணை அந்த வழக்கில் தீர்ப்பு அல்லது இறுதி ஆணை ஆகாது என்று நீதிமன்றம் கூறியது.

### 9. சுபல் பால் எதிர் மெலினாபால் மற்றும் மற்றவர் AIR 2003 SC 1928 :
**(SUBL PAUL VS. MELINA PAUL AND ANOTHER, AIR 2003 SC 1928)**

இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925 பிரிவு 299ன் கீழ் மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒரு தீர்ப்பு மட்டுமே ஆகும். தீர்ப்பாணை ஆகாது என்று உச்சநீதிமன்றம் கூறியது.

## ஈ. தீர்ப்பாணைகளாகும் தீர்ப்புகள் :

**(DECISIONS WHICH ARE DECREES)**

பின்வருபவை தீர்ப்பாணைகளாகும் தீர்ப்புகள் ஆகும்.

1. இறுதித் தீர்ப்பாணையில் பிரதிவாதியை விடுவித்தல்.

2. வழக்கை தள்ளுபடி செய்யும் உத்தரவு.

3. இறுதி தீர்ப்பாணைக்கான விண்ணப்பத்தினை தள்ளுபடி செய்தல்.

4. இறுதி தீர்ப்பாணைக்கான விண்ணப்பத்தினை நிராகரித்தல்.

5. ஏல விற்பனையை ரத்து செய்ய பிறப்பிக்கும் உத்தரவு.

## உ. தீர்ப்பாணையின் வகைகள்:

**(TYPES OF DECREES)**

உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் ஐந்து விதமான தீர்ப்பாணைகளை அங்கீகரிக்கின்றது.

### 1. முதனிலைத் தீர்ப்பாணை:

**(PRELIMINARY DECREE)**

இங்கு வழக்கானது முழுவதுமாக முடிவு செய்யப்படுவதில்லை. இருந்த போதிலும், வழக்கின் ஏதேனும் அல்லது முழுவதுமான கருத்து வேறுபாடு சம்பந்தமாக வழக்குதாரர்களுக்கிடையிலான உரிமைகள் பற்றி தீர்ப்பில் தீர்மானம் செய்யப்படுகின்றது. வழக்குதாரர்களுடைய உரிமைகள் முதலில் தீமானிக்கப்பட வேண்டிய வழக்குகளுக்கு பொதுவாக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும்.

முதல்நிலை தீர்ப்பாணையானது கீழ்க்கண்ட வழக்குகளில் பிறப்பிக்கப்படும்.

1. உடைமைக்கான அல்லது வாடகைக்கான வழக்குகள்.



2. நிர்வாக வழக்குகள்.

3. பாகப்பிரிவினை வழக்குகள்.

4. கூட்டாண்மை நிறுவனத்தைக் கலைத்தல் சம்பந்தமான வழக்குகள்

5. பாகப்பிரிவினை மற்றும் தனி உடைமை வழக்குகள்.

6. அடமான சொத்து விற்பனை சம்பந்தமான வழக்குகள்.

7. அடமான மீட்பு சம்பந்தமான வழக்குகள்.

மேற்கண்ட பட்டியல் ஒரு உதாரணம் மட்டுமே. மேலும் மற்ற வழக்குகளிலும் முதன்நிலை தீர்ப்பாணை வழங்கப்படலாம். காலவரையறைக்கு உட்பட்டிருந்தால் மட்டுமே முதன்நிலை தீர்ப்பாணையை மேற்முறையீட்டில் எடுத்துக்கொள்ள முடியும். கால வரையறை முடிவுற்றிருந்தால் இறுதி தீர்ப்பாணையின் மீதான மேல் முறையீட்டில் முதன் நிலை தீர்ப்பாணையின் சரியான தன்மை குறித்து கட்சிக்காரர் முரண்பாடு செய்ய முடியாது.

#### எடுத்துக்காட்டு 1:

குறிப்பிட்ட நிவாரணச் சட்டத்தின் கீழ் (**Specific Relief Act**) ஆவணத்தை ரத்துச் செய்யும் படி ‘அ’ என்பவர் ‘ஆ’ என்பவரின் மீது வழக்குத் தொடர்கிறார். இவ்வழக்கில் ஒரு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகின்றது. இது இறுதியான தீர்ப்பாணை ஆகும். ஏனெனில் வழக்கானது முழுவதுமாக முடிவு செய்யப்படுகின்றது.

#### எடுத்துக்காட்டு 2:

ஆஸ்திக் கணக்கினைக் குறிப்பிட்டு கூட்டாண்மை நிறுவனத்தைக் கலைக்கும்படி கோரி Y மீது X வழக்குத் தொடர்கிறார். இதில் இரண்டு தீர்ப்பாணைகள் நீதிமன்றத்தால் வழங்கப்படலாம்.

அ. வழக்குதாரருடைய பங்குகள் மற்றும் ஆஸ்திகளின் கணக்குகளை அறிவிக்கும் முதன்நிலை தீர்ப்பாணை.

ஆ. சொத்தினைக் கணக்கிட்டு கடன் ஈந்தோர்க்கு தொகையை வழங்கும்படி உத்தரவிடும் இறுதித் தீர்ப்பாணை.

## 2. இறுதித் தீர்ப்பாணை: (FINAL DECREE)

எந்த ஒரு தீர்ப்பாணை மூலம் வழக்கு முழுவதுமாக முடிவு செய்யப்படுகின்றதோ அந்தத் தீர்ப்பாணை இறுதி தீர்ப்பாணை எனப்படும். தீர்ப்பாணைக்கு எதிரான மேல் முறையீட்டு கால அளவு முடிவடைந்து விட்டாலும் கூட அவ்வகை தீர்ப்பாணை இறுதி தீர்ப்பாணையாகவே அழைக்கப்படும்.

இறுதி தீர்ப்பாணையின் முக்கிய அம்சம் என்னவென்றால் வழக்கு முழுவதுமாக முடிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒரு தீர்ப்பாணை ஒரு நிபந்தனையுடன் கூடியிருக்குமானால், அப்பொழுதும் அது இறுதி தீர்ப்பாணை ஆகும். (உ.ம்) அடமான மீட்பு உரிமைக்காக 'ஆ'க்கு எதிராக 'அ' வழக்குத் தொடர்கின்றார். 'அ'க்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகின்றது. தீர்ப்பாணையின்படி அந்தத் தொகையானது இரண்டு மாதங்களுக்குள் 'அ' வினால் செலுத்தப்பட வேண்டும் என்பது நிபந்தனை. இது இறுதித் தீர்ப்பாணை ஆகும்.

## 3. பகுதி முதன் நிலை, பகுதி இறுதித் தீர்ப்பாணை: (DECREE PARTLY PRELIMINARY AND PARTLY FINAL)

ஒரு தீர்ப்பாணையானது ஒரு பகுதி முதன்நிலை ஆகவும், மறு பகுதி இறுதி நிலை ஆகவும் இருக்கலாம். (உ.ம்.) அசையாச் சொத்தை தம்வசம் வைத்திருப்பவர் மீது அச்சொத்திலிருந்து அடைந்த இடைக்காலப் பலன் மற்றும் அச்சொத்தினை மீட்கும் மீதான வழக்கில் நீதிமன்றம் இரண்டு தீர்ப்பாணைகளை வழங்க முடியும்.



## 4. வழக்குரையை நிராகரிக்கும் ஆணை: (ORDER REJECTING A PLAINT)

வழக்குரை நீதிமன்ற ஆணையினால் நிராகரிக்கப்படலாம். ஆனால் வாதி அதே காரணத்தை முன்னிட்டு புதிதாக வழக்குரை தாக்கல் செய்ய முடியும். இருந்தபோதிலும் வழக்குரையை நிராகரிப்பது என்பது வழக்கை தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்படும் ஆணையிலிருந்து வேறுபட்டதாகும். வழக்குரையை நிராகரிக்கும் ஆணையானது தீர்ப்பாணையாக எடுத்துக் கொள்ளப்படும்.

வழக்குரையை நிராகரிப்பதானது, சட்டத் தொகுப்பின்படி அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தரவு மூலம் தான் அமைய வேண்டும். சட்டத் தொகுப்பானது நிராகரிப்பதற்க்கு அங்கீகாரம் அளிக்கவில்லை என்றால் அவ்வாணையானது தீர்ப்பாணை ஆக கருதப்படமாட்டாது. பிராதினை அல்லது வழக்குரையை திரும்பித்தருதல் தீர்ப்பாணை ஆகாது.

## 5. பிரிவு 47 அல்லது பிரிவு.144 கீழ்உள்ள வினாவிற்கான தீர்மானம்:

[DETERMINATION OF A QUESTION UNDER (Sec. 47 OR Sec 144)

பிரிவு 47 அல்லது 144ன் கீழ் தீர்மானிக்கப்படும் எந்த ஒரு கேள்வியும் வெளிப்படையாகவே தீர்ப்பாணை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் பிரிவு 47 அல்லது 144ன் கீழ் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆணையும் தீர்ப்பாணையாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. கருத்து வேறுபாடுள்ள விஷயங்களில் வழக்குதாரர்களுக்கிடையிலான உரிமைகள் இறுதியாக நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டு, பிறப்பிக்கப்படும் உத்தரவே தீர்ப்பாணை ஆகும். ஒரு சாதாரண எழுவினா அல்லது தற்செயலாக ஏற்படுகின்ற ஒரு வினாவினை தீர்மானித்தல் தீர்ப்பாணையாகாது.

## ஊ.முதன் மற்றும் இறுதித் தீர்ப்பாணைகளுக்கு இடையிலான வேறுபாடுகள்:

**(DIFFERENCES BETWEEN PRELIMINARY AND FINAL DECREE)**

### முதன் நிலை தீர்ப்பாணை:( PRELIMINARY)

1. வழக்கை முடிவு கட்டுவதற்கு முன்பே இது வழங்கப்படுகின்றது.

2. முதன் நிலை தீர்ப்பாணை உயர் தகுதி உடையது ஆகும்.

3. முதன்நிலை தீர்ப்பாணை மேல் முறையீட்டில் தள்ளுபடி செய்யப்பட்டால் இறுதித் தீர்ப்பாணை தானாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

4. முதன் நிலை தீர்ப்பாணையை எதிர்த்து செய்யப்படும் மேல் முறையீடானது நிர்ணயிக்கப் பட்ட கால வரையறைக்குள் செய்யப்பட வேண்டும்.

### இறுதித் தீர்ப்பாணை:(FINAL DECREE)

1. வழக்கு முடிவு கட்டிய பின்பு தான் இது வழங்கப்படுகின்றது.

2. இறுதித் தீர்ப்பாணையானது முதன் நிலை தீர்ப்பாணையை சார்ந்திருப்பது ஆகும்.

3. முதன் நிலை தீர்ப்பாணைக்கு உரியது இதற்கும் பொருந்தும்.

4. இறுதித் தீர்ப்பாணை ஆனது காலாவதி ஆகிவிட்டால், மேல் முறையீடு செய்ய இயலாது.



## பல்கலைக்கழக வினாக்கள்

1. தீர்ப்பாணை மற்றும் கட்டளை (உத்தரவு) முக்கிய அம்சங்கள் யாவை?

2. தீர்ப்பாணைக்கும், கட்டளைக்கும் (உத்தரவு) உள்ள வேறுபாடுகள் குறிப்பிடுக.

3. தீர்ப்பாணை, மற்றும் கட்டளை (உத்தரவு) என்ற சட்டச் சொற்களை விளக்குக. இரண்டிற்கும் இடையேயுள்ள அதிக முக்கிய வேறுபாடுகளை விளக்குக.

4. தீர்ப்பாணை இதனை விளக்குக. 1908 ஆம் வருடத்திய உரிமையியல் வழக்கு நடைமுறை தொகுப்பில் பல்வேறு வகையான தீர்ப்பாணைகள் இயற்றப்பட்டுள்ளதை- விளக்குக.

5. தீர்ப்பாணை – சிறு குறிப்பு வரைக.